[1992 மார்ச் 20

நரம் செய்து கொடுப்பது அரசினுடைய கடமை என்று நான் கருதுகிறேன். அதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.00

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்களுக்குத் தொடர்ந்து வேலை தரப்படுவதில்லை. எப்போது வேலைக்கு ஆட்கள் தேவைப்படுகிறதோ, அப்போதெல்லாம் அவர்கள் நியமிக்கப் படுகிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியை முன் வைத்து ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள் அவசர அரசு அலுவல் நிமித்தமாக வெளியே செல்ல வேண்டியிருக்கிறது என்பதால் அவருடைய வினாவை முன்பே எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்திருக்கிறார். அவையின் அனுமதியோடு அது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. வினா எண் 294, திரு. ப. ரங்க நாதன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளைப் பராமரித்தல்.

*4311 திரு. ப. ரங்கநாதன் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகள் பராமரிப்பு இல்லாமல் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவ்வீடுகளைப் பழுதுப்பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) அந்த வீடுகள் அவர்களுக்கு இலவசமாக பதிவு செய்து கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்

(ஆ) தமிழ்நாடு குடிசைப்பகுதிப் மாற்று வாரியத்தின் பொறுப்பில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகளை பழுதுபார்க்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

1992 மார்ச் 20]

(இ) இலவசமாக பதிவு செய்து கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகள் பராமரிப்பு இல்லாமல், பழுதடைந்து உள்ளன என்பதை அரசு அறியுமா என்று கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் 'ஆம்' என்ற பதிலை இந்த அவையிலே தந்துள்ளார். கடந்த 20 ஆண்டுகளாகப் பழுதுபார்க்கப்படாமல் அங்கே சாலை வசதி இல்லாமல், குடிக்க தண்ணீர் இல்லாமல், சாக்கடை வசதி இல்லாமல், மாடிக்கு செல்ல மாடிப் படிகளே இல்லாமல், மின்சார வசதி இல்லாமல் மிகவும் அவலமான ஒரு சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிற அந்தப் பகுதி மக்களுக்கு, அந்தக் குடியிருப்புகளுக்கு உடனடியாக அந்த வீடுகளைப் பழுதுபார்க்கும் பணி தொடங்கப்படுமா என்பதையும் எந்தத் தேதியிலிருந்து அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்பதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆம் என்றுசொன்னதன் அர்த்தம், சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக கட்டப்பட்ட குடியிருப்புகள் சில பழுதடைந்துள்ளன. அந்த அடிப்படையில் தமிழகத்திலே குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 31-3-1991 முடிய 53,124 குடியிருப்புகள் இதுவரையில் கட்டப்பட்டுள்ளன. இக்குடியிருப்புகளைப் பழுதுபார்த்து செப்பனிடுகின்ற வகையிலே அரசு ஆணை எண் 897, 3-8-1990 ஆம் நாளிட்ட அரசு நிலை ஆணைப்படி ரூ. 2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. இதன் மூலமாக 30-9-1991 வரை 17,325 குடியிருப்புகளுக்கு சுமார் ரூ. 159,53,000 செலவில் பழுதுபார்க்கும் பணிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன. மேலும் ரூ. 40,47,000 செலவிலே பழுதுபார்க்கும் பணிகளை இவ்வாண்டு இறுதிக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. ரங்கநாதன் :. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பழுதுபார்க்கின்ற பணி இரண்டு கட்டமாக நடந்து கொண்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் இங்கே கூறினார்கள். ஆனால் சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் இன்றையநாள் வரையில் பழுதுபார்க்கின்ற பணி நடைபெற்றதாகத் தெரியவில்லை. ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் ஏறத்தாழ என் தொகுதியில் 2,946 குடியிருப்புகள் இருக்கின்றன, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள். சீக்கிரம் கேட்டு முடியுங்கள்.

திரு. ப. ரங்கநாதன் : அமைச்சர் அவர்களே அவருடைய பதிலிலே குறிப்பிட்டார். 20 ஆண்டுகளாகப் பழுதுபார்க்கும் பணி நடைபெறவில்லை என்று குறிப்பிட்டார்கள். 20 ஆண்டுகளாகப் பழுதுபார்க்கும் பணி நடைபெறவில்லையென்றால், அந்தத் துறையிலுள்ள அதிகாரிகள் பணியாற்றாமல், 20 ஆண்டுகளாக பழுதுபார்க்கும் பணிகளைச் செய்யாமல் என்ன பணிகளை மேற்கொண்டிருந்தார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் ஒன்றைக் கவனிக்கவேண்டும். வினாக்கள்-விடைகள் நேரத்தில் குற்றச்சாட்டுகள் சொல்வது கூடாது என்று விதி இருக்கிறது. உங்களுக்கு வேண்டியதைக் கேள்வியாகக் கேளுங்கள்,

திரு. ப. ரங்கநாதன் : அங்கே துறையிலே பணியாற்றுகின்ற அதிகாரிகள் பழுதுபார்க்கின்ற பணிகளை முறையாகச் செய்யாமல் எந்தப் பணிகளைச் செய்து கொண்டிருந்தார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவைக்குத் தவறான தகவலை, உண்மைக்குப் புறம்பான தகவலைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். நான் கூறியது, இந்தக் கட்டிடங்கள் 20 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது என்று சொன்னேன். 20 ஆண்டுகளுக்கு மேலாக பழுது பார்க்காமல் இருக்கிறது என்று சொல்லவில்லை. 20 ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்ட வீடுகளில் பழுது இருக்கிறது. அந்தப் பழுது பார்த்து செப்பனிடப்படும் வேலை இதுவரையில் 159 லட்சத்து 53 ஆயிரம் ரூ. செலவில் 17,325 குடியிருப்புகள் செப்பனிடப்பட்டிருக்கிறது என்றுதான் சொன்னேன். ஆகவே அது புற்றி முறையான தகவல் பெற்று குறிப்பாகச் சென்னையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் போற்றுதற்குரிய முதல்வர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அந்தப் பணிகள் செவ்வனே நடைபெற்று இருக்கின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எம். கே. பாலன்.

திரு. எம். கே. பாலன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னையிலே உள்ள வாரிய வீடுகளில் பழுதடைந்துள்ள நிலையில் உள்ள குடியிருப்புகள் கணக்கெடுக்கப்பட்

1992 மார்ச் 20]

டுள்ளதா ? இந்த ஆண்டில் எத்தனை குடியிருப்புகளுக்குப் பழுதுபார்க்கும் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே இது சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. போளூர் வரதன்.

திரு. போளூர் வரதன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே சொல்லுகிறபோது 20 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்ட வீடுகள் சரி பார்க்கப்படுகிறது என்று சொன்னார்கள். அப்படி என்று சொன்னால் சென்னை நகரத்திலே மட்டும் எத்தனை வீடுகள் 20 ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்டிருக்கின்றன ? மாவட்ட வாரியாக எத்தனை குடியிருப்புகள் 20 ஆண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்டிருக்கின்றன? மாவட்ட வாரியாக எத்தனை வீடுகள் பழுது பார்க்கப்பட்டிருக்கின்றன ? எத்தனை வீடுகள் பழுது பார்க்கும் நிலையில் உள்ளன ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுடைய கேள்வியே பெரிய விடை போன்று இருக்கிறது. துணைக் கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. போளூர் வரதன் : சென்னை நகரத்திலே 20 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்ட வீடுகள் இடிந்து பலர் இறந்திருக்கிறார்கள். இந்தத் தகவலின் அடிப்படையில் மாவட்ட வாரியாக எத்தனை வீடுகள் பழுது பார்க்கப்படுகின்றன என்ற தகவலை அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : இது சம்பந்தமான குறிப்பு என்னிடம் தற்போது தரப்படவில்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினரைத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 288, திருமதி ரெ. சியாமளா, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.